விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 20 ஸபர் 1 இதழ் 238

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-10-1986

## தமிழினத்துக்கு புதிய கல்வித்திட்டம் அவசியம்

யாழ்ப்பாணம், திங்கள்.

தமிழினத்துக்கான ஒரு புதிய கல்வித் திட்டம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மறுமலர்ச்சிக் கழகமும், மாணவர் முன்னணியும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கல்வி சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழத்தின் வளர்ச்சிக்கும் தேசாபிமானப் பிரச்சினைகளின் தோற்றத்திற்கும் இன்றைய கல்வியமைப்பின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவுக்கு இல்லையென்றே கூறவேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் வளங்களையும் செல்வத்தினையும் பார்க்க அந்நாட்டுப் பிரஜைகளிலேயே தங்கியுள்ளது. தேசாபிமானப் பிரஜைகளை உருவாக்க ஒருங்கமைக்கப்பட்ட பல்நோக்கம் கொண்ட கல்வியமைப்பு மிகவும் முக்கியமானது.

இன்றைய கல்வி அமைப்பானது ஒரு மாணவனின் திறமைகளை மழுங்கடித்து அவனுடைய தன்னம்பிக்கைக்கு ஆப்பு வைத்து ஒருகுறுகிய எதிர்கால நோக்கத்தினையே உருவாக்குகின்றது. இதனால் மாணவர்கள் கல்வியின் பயனை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். எனவே தமிழினத்திற்கான ஒரு கல்வித் திட்

(5-ம் பக்கம் பார்க்க)

● மாகாண எல்லைகளை மீளமைக்க

# எல்லை நிர்ணய ஆணைக் குழு நியமிக்க அரசு யோசனை

கொழும்பு, ஞாயிறு

**இனப்பிரச்னைப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு, மாகாண மீளமைப்பு செய்து புதிய எல்லைகளை நிர்ணயிப்பதற்கான ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளதென அதிகார பூர்வவட்டாரங்கள் தெரிவித்தன.**

இவ்விடயம்பற்றி மேலும் தெரிவித்த அவ்வட்டாரங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மோது தமதுகுறைந்த பட்சக்கோரிக்கையாக முன்வைத்த மாகாண இணைப்பு அல்லது மொழிவாரி மாநிலக் கோரிக்கைக்குப்பதிலாக இந்த மாகாணமீளமைப்பு ஈடுசெய்யுமென அரசாங்கம் நம்புவதாகக் கூறினர்.

எனினும் இந்தயோசனையையிட்டு கூட்டணியினர் எதவித பதிலையும் தெரிவிக்கவில்லையெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. கூட்டணியினர் இந்த எல்லைநிர்ணய ஆணைக்குழு நியமனத்திற்கு உடன்பாடு தெரிவித்தால் நியமிக்கப்படும். ஆணைக்குழு மாகாண எல்லைகள் எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனவாக விருக்குமென அவர்கள் குறிப்பிட்டனர்.

ஆனால் இந்த ஆணைக்குழு ஒரு நீண்டகால எல்லைக்குள்

(8ம் பக்கம் பார்க்க)

### குண்டுவைத்து தகர்ப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு இ. போ ச. டிப்போவிலிருந்த பாரம் தூக்கும் இயந்திரம் இனந்தெரி

(8ம் பக்கம் பார்க்க)

## லொறிச்சேவை நிறுத்த போராட்டம் நியாயமானது –விடுதலைப்புலிகள்

யாழ்ப்பாணம், திங்கள்.

கொழும்புக்கு வட பகுதியிலிருந்து பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் கடத்தப்பட்டுக் கொள்ளையடிக்கப்படுவதைக் கண்டிக்குமுகமாகக் கடந்த சில தினங்களாகக் கடையடைப்பும் லொறிப் போக்குவரத்தும் நடைமுறை போராட்டம் நடத்திவருவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கையொன்றைவிடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும், யாழ். வர்த்தகர் சங்கமும், வட பிரதேச லொறிப் போக்குவரத்துச் சங்கமும் இணைந்து கொழும்புக்கு வடபகுதியிலிருந்து பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறிகள் கடத்தப்பட்டதைக் கண்டிக்குமுகமாகச் சில தினங்களாகக் கடையடைப்பும் லொறிப் போக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## சிங்கள அதிபர் கடமையாற்றும் கந்தநுவர தமிழ் வித்தியாலயம்!

### தேசியகீதம் சிங்களத்தில்பாட மாணவிகளுக்கு பயிற்சி

(நமது நிருபர்)

மாத்தளை தேர்தல் தொகுதியில் உள்ள கந்தநுவர தமிழ் வித்தியாலயத்தில் பேச்சுத் தமிழ் கூடபுரிந்து கொள்ள முடியாத ஒரு சிங்கள அதிபர் கடமையாற்றுவதால் அவ்வித்தியாலத்தில் கல்வி பயிலும் சுமார் 160 தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இப்பாடசாலை அமைந்துள்ள கந்தநுவர நகரத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் கிராமங்களும் அதைச் சுற்றி தேயிலைத் தோட்டங்களும் உள்ளன

இத்தமிழ் வித்தியாலயத்தில் சுமார் 160 க்கும் மேற்பட்ட தமிழ்மாணவ மாணவிகள் தமிழ்மூலம் கல்விகற்கின்றார்கள்.

எட்டாம் வகுப்புவரை கல்வி போதிக்கப்படும் இந்தப் பாடசாலையில் பேச்சுத்தமிழ் கூட புரியாத சிங்கள பெண் அதிபராக உள்ளார். அதேசமயம் ஒரே ஒரு தமிழ்ப் பெண்ஆசிரியை மட்டும் இங்கு கல்வி போதித்து வருகின்றார்.

சிங்களப்பெண்ஒருவர் அதிபராக இருப்பதால தமிழ் மொழி, சமயம், கலாசாரம் போன்றவைகளில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.

அண்மையில்இந்தப் பாடசாலையின் புதிய கட்டிடத்திறப்பு விழாவிற்கு வரவேற்புஅழைப்

[5ம் பக்கம் பார்க்க]

## தமிழ் கைதிகள் உண்ணாவிரதம் தற்காலிக இடை நிறுத்தம்

### மாணவ அமைப்பின் நடவடிக்கை ஒத்திவைப்பு

[அலுவலக நிருபர்]

சிறைக் கைதிகளுக்கு ஆதரவாக இன்று திங்கள்முதல் நடைமுறைப்படுத்த இருந்த நடவடிக்கைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்தாக அறிவிக்கப்பட்டுள்ளது

மாணவ அமைப்புக்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில்

## முகாமிலிருந்து வெளியேறிய இராணுவம் மீது மக்கள் விடுதலை படை தாக்குதல்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை ராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட ராணுவத்தின் மீது மக்கள் விடுதலைப்படை தாக்குதல் நடத்தியதில் பலர் கொல்லப்பட்டதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும்

[5-ம் பக்கம் பார்க்க]

## திம்பு கோரிக்கையின் அடிப்படையில் போராட்டம்!

### இணைப்புக்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்.

திம்பு மகாநாட்டில் தமிழ் அரசியல் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட 4அம்ச கோரிக்கைகளின் அடிப்படையில் தமிழர் உரிமைப் போராட்டத்தைத் தொடருவதென தமிழ்

(5ம் பக்கம் பார்க்க)

## "ரமேஷ், நகுலனை விடுதலை செய்யவேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"இம்மாதம் 1-ம் திகதி கடத்தப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த ரமேஷ், நகுலன் ஆகியோர் விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது மக்கள்முன் பகிரங்க விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்"

இவ்வாறு ரமேஷ் [நல்லூர்] நகுலன் [கோப்பாய்] ஆகியோர் கடத்தப்பட்டதையிட்டு ஈ. பி. ஆர், எல். எவ் தோழர்களால் 'அராஜகத்துக்கெதிராகப் போராடுவோம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்

[5ம் பக்கம் பார்க்க]

## இந்திய உயர்மட்ட தூதுக்குழு கூட்டணியினரை நேற்றும் சந்தித்துப் பேசியது

சென்னை, அக் 5

இலங்கை இனப்பிரச்னைக்கு அதிகாரப் பரவலாக்கம் மூலம் தீர்வு காணுவதற்கான வழிவகைகளை கூட்டணியுடன் ஆராயவென சென்னை வந்த இந்திய மத்திய அரசின் உயர் மட்டத்தூதுக் குழுவினர் நேற்றுப் தொடர்ந்து கூட்டணியினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

நிர்வாகச் சீர்திருத்தத்துறை இணையமைச்சர் ப. சிதம்பரம், அரசியலமைப்பு நிபுணர் எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரே இவ்வுயர்மட்டத் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் இன்று புதுடில்லி திரும்புவார்களெனஎதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லி திரும்பியதும் கூட்டணியினருடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்து அறிக்

(8-ம் பக்கம் பார்க்க)

# இன்று மாலைமுதல் மீண்டும் தூரலொறிச்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபிராந்திய லொறிபோக்குவரத்துச்சங்கம், யாழ் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம் ஆகியவற்றின் பொதுச் சபை, இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைபெற்றுவந்த தூரலொறிப் போககுவரத்துச் சேவை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இன்று முதல்சேவையை ஆரம்பிப்ப

(5-ம் பக்கம் பார்க்க

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காந்தம் (மாணவர் இதழ்) அக்டோபர்-நவம்பர் வெளியீடு விற்பனையாகிறது விலை ஐந்து ரூபா; பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (C5027)

சிறிய வீட்டிலுள்ள கூரைத் தகடுகள், வலைக்கம்பிக் கிருதிகள், யன்னல்கள், கதவுகள், தீராந்திகள், கூரைமரங்கள், நீப்பைகள், கப்புக்கள் மொத்தமாக உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (C5020)

''புதிய சமூகக் கல்வியின் சாரம்-1'' க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்குரியது வெளியாகியுள்ளது, விலை 22 00 12 அத்தியாயங்களின் சுருக்கம். பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (C5016)

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்- [1.] ஸ்ரீ துர்க்காதேவி, லட்சுமி, சரஸ்வதி துதிப் பாடல்கள். [2.] சகலகலாவல்லி மாலை முழுப்பாடல்களும் ஸ்ரீ துர்க்காதேவி துதி. இன்னும் பல பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C5015)

நவீன வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி, கட்டில், Foam Rubber ஹோல் செற், Formica வட்ட சாப்பாட்டு மேசைகள், தேக்கு Show case, நாஷனல் T. V., கசற் றேடியோ, பீங்கான் கிளாஸ் வகைகள், Pressure Cooker, எவர்சில்வர் பாத்திரங்கள், பியர்கிளாஸ் Chest of Drawers சிங்கர் மெசின், Fan மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு 826, பிரதான வீதி யாழ்ப்பாணம். (செல். சாலிஸ் பாடசாலையருகில்) C 4967

## தேவை

சாவகச்சேரி வேல் சினிமா தியேட்டர் வீதியிலுள்ள குணம் மோட்டோஸ் தொழிலகத்திற்கு அனுபவம் வாய்ந்த லேத்மன் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். காலை 9 மணிமுதல் மாலை 5மணிவரை மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (C 4963)

நூலகர் [Librarian] உரும்பிராயில் உள்ள எமது நூலகத்திற்கு நூலக விஞ்ஞானம் கற்றுத் தேர்ந்து முன் அனுபவம் பெற்ற பெண்மணிகள் தேவை. எல்லா தகைமைச் சான்றிதழ்களுடனும் தாம் விரும்பும் வேதனத்தைக் குறிப்பிட்டு 9-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் அனுபவமற்றவர்களின் விண்ணப்பங்களும் பழகுனர் பதவிக்கு பரிசீலிக்கப்படும். நிர்வாகி, யூனிபோ, வேம்பன் வீதி, உரும்பிராய். [C-5006]

## தேவை

சகல வசதிகளுடனும் தொலைபேசி உட்பட மேல் மாடிவீடு வாடகைக்குத் தேவை. சுண்டுக்குளியில்விரும் பத்தக்கது தொடர்பு: திருஞானஸ் கட்டிடம், யாழ்ப்பாணம். [C 4978]

## சேவை

யாழ். சைனீஸ்றெஸ்ரோரன் முதலாம் குறுக்குத்தெரு, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களுடைய ஸ்தாபனம்தினசரி இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும். தொலைபேசி இல: 23460 (C 4790)

## மணப்பந்தல்

இந்து வேளாள சைவ போசன மணப்பெண்ணுக்கு 30 - 38 வயதுக்கிடைப்பட்ட T A, B A அதனோடு ஒத்து வரக்குடிய மணமகன் தேவை. 50 வயதுக்கு மேற்பட்ட வேளாள இந்து கணக்காளருக்கு 37 வயதுக்கு மேற்பட்ட மணப்பெண் தேவை தாரமிழந்தோரும், விவாகரத்தானோரும் விண்ணப்பிக்கலாம். மங்களஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C 5000]

35 வயதுடைய ஆங்கில ஆசிரியைக்கு கிறிஸ்தவ மணமகன் தேவை. ஆசிரியர் அல்லது அதற்குக் கூடிய சமூக அந்தஸ்துடையவர் விரும்பத்தக்கது. வீடும் போதிய சீதனமும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க; சகாய திருமணசேவை, புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. (C 5007)

## வகுப்புகள்

108 Brown Road. A/L 87. பௌதீக இரசாயனம் ஆசிரியர்: சத்தீஸ் ஆரம்பம்: 8-10-86 புதன் 6-15 A. M நேரம்: திங்கள், புதன் 6-15 A. M. [C4984]

87-ம், 88-ம் ஆண்டிற்கான G.C.E A/L வகுப்புகள் 16-10-86 ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு; S. அருள்நங்கை 73, உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். C 1425

ஆரம்பம் 6-10-86 A/L 87 பகல்நேர தூய/பிரயோக கணிதம். ஆசிரியர்: பிரேம்நாத். Time: 9-00 a m. 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (P. M. C. முன்பாக). (C-4605)

City and Guilds London Examination, மோட்டர் றீவைண்டிங், ரான்ஸ்போமர் வைண்டிங், Factory, வீட்டு வயறிங், ஓட்டோ வயறிங் ஆகிய பயிற்சிகள் ஆரம்பம்: 15 10-86 OMEGA. Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) [C4969]

## 31-ம் நாள நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஆ. வேலுப்பிள்ளை
தோற்றம்: 08-06-1914
மறைவு: 07-09-1986

அன்னாரது 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 07-10-1986 செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். ஆறாத்துயருறும்;
மனைவி அன்னம்மாவும் குடும்பத்தினரும்,
1/11, 2ம் ஒழுங்கை.
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (C4987)

## திருமதி சந்தியோகு திரேசாள் அன்னப்பூ மார்க் அவர்களின் 1-வது வருட நினைவு தினம்



அன்னை மடியில்; 15-10-1915
ஆண்டவன் அடியில்; 06-10-1985

அம்மா என்றழைத்திட நீ இல்லை எம்மை ஆற்றிட இங்கு யாருமில்லை விழியினில் நீர் மல்க நிற்கின்றோம் ஒளியினுள் நீ ஒழிந்த ஓராண்டை. அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று காலை நடைபெறும் பூசைப்பலியிலும், இன்று பிற்பகல் 4 மணிக்கு வீட்டில் நடைபெறும் வழிபாட்டிலும் பங்குபற்றி அவரது ஆன்மசாந்திக்காக வேண்டும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.
அவரது பிரிவால் துயருறும்:
அன்புமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்.
''ஆனந்தவாசம்''. வங்காலை (C 5008)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
மரணசாதனமின்றி மரணமெய்திய உடுவில் டச் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயவீரசிங்கம் என்பவரின் மரணச் சொத்து விடயமாக.
மரணமெய்தியவர்.
வழ இல தத்துவம்/3990
செல்லத்துரை ஜெயவீரசிங்கம் கைம்பெண் சிவயோகமலர், டச் றோட்டு, உடுவில்.
மனுதார்.

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படிநீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி.
நீதிமன்றக் கட்டளைப்படி
க. நாகேந்திரம்
(C5005) பதிவாளருக்காக.

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி

நாகலிங்கம்—சச்சிதானந்தன்
(மானிப்பாய்)
6- 10-1986

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஐந்தாண்டுகள் ஆகின்றன. உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சை விட்டகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.
மனைவி, பிள்ளைகள்.
கொன்வென்ட் வீதி,
மன்னார். (C 4998)

## ஆறுவது வருட நினைவுதினம்



சமத்தர் செலவத்துரை
(முறிவு-நோய் வைத்தியர்)
ஒட்டகப்புலம்
யாழ்ப்பாணம்
தோற்றம்: 5-10-1905
மறைவு: 6-10-1981

ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
(C 5014)

## ஓராண்டு நினைவஞ்சலி

திதி: 06- 10- 1986



கட்டப்பிராய்
சின்னப்பு குணசிங்கம்
(காந்தன்)
தோற்றம்: 23-07-1946
மறைவு: 17-09-1985

ஓராண்டு காலம்
ஓடி மறைந்தாலும்
நீறுன நெருப்பில்
எங்கள்
நெஞ்சு கனிகிறது.
ஓராண்டு என்ன
ஒரு நூறு ஆண்டெனினும்
அணையா விளக்காய்
ஒளி வீசும் உன் உறவு!
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உறவினர்கள்.
(C 5009)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



திரு. அப்பாத்துரை விஷ்ணுநாதன்
(கிளை முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்)
படைப்பு: 18-0?-48
அழிப்பு: 25-08-86

வளந்தரும் கிளிநொச்சிக் கணேசபுரத்தில்
வள்ளலப்பாத்துரை
பெற்ற விஷ்ணுநாதன்
களங்கமின்றிக கருத்
துடனே கமத்தைச்
செய்து
கருணையுடன் கால
மெலாம் குடும்பத்தைக்
காத்த
அளப்பில்லா ஆனந்த
வடிவே எங்கள்
சங்கத்தின் முகாமையாள
அருமைத் தம்பி
குளத்தின் நீர் மடை
திறந்தாற் போலக்
கண்ணீர்
வடிக்கின்றோம்? அமர
வாழ்வு வாழ்வாய் நீரே.

8 10-86 புதன் கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மனைவி, பிள்ளைகள்,
கணேசபுரம்,
கிளிநொச்சி.
(C 4988)

உலகச் செய்திகள்

### அக்டோபர் 27ல் பிரார்த்தனை செய்யும்படி

# உலகப் போராட்ட பிரிவுகளிடம் பாப்பரசர் வேண்டுகோள்!

பாரிஸ், அக். 5

**போராட்டங்களில் ஈடுபட்டுவரும் உலகின் அனைத்து அரசாங்கங்கள், விடுதலை இயக்கங்கள் கெரில்லாப் பிரிவுகள் என்பவற்றிடம் அக்டோபர் மாதம் 27ந் திகதியை ஓர் அமைதிப் பிரார்த்தனைத் தினமாக அனுஷ்டிக்கும்படி பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பிரான்ஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவரும் பாப்பரசர், இங்கு லியோன் என்ற நகரில் இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றிலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்

உலகில் போர்அபாயம் அதிகரித்துவருவது குறித்தும், லட்சக்கணக்கணக்கானவர்கள் ஆயுதபாணிகளாக இருந்துவருவது குறித்தும்பாப்பரசர்கவலை வெளியிட்டார். இதனையடுத்தே அக்டோபர் 27ம் திகதியை அமைதிப் பிரார்த்தனைத் தினமாகக் கொள்ளும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

வடஅயர்லாந்தின் கெரில்லாப் பிரிவான ஐ ஆர் ஏ. யையும் சில லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை இயக்கங்களையும் ஸ்பெயினில் உள்ள கெரில்லா பிரிவொன்றையும் தமது அவ் வேண்டுகோளில் பாப்பரசர் முக்கியமாகக் குறிப்பிட்டார்.

உலக நாடுகளிலுள்ள கத்தோலிக்கஆயர்மார்கள், தாம் அறிவித்துள்ள அக்டோபர் 27ம் திகதி பிரார்த்தனைத் தினத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்தவேளை பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸில் விரிவான சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். உண்மையில் பிரான்ஸில் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதையடுத்து பாப்பரசரின் பாதுகாப்புக்கருதி சுமார் பத்தாயிரம் பிரெஞ்சு பொலிஸார் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது

அக்டோபர் 27ந் திகதியை பிரார்த்தனைதினமாக தேர்ந்தெடுத்தமைக்கு விசேட காரணமெதுவுமில்லை எனவும், ஒரு பொதுத்தினமாகவே அதனைத் தம் கொண்டதாகவும் பாப்பரசர் குறிப்பிட்டார்.

## புனிதமண்



வல்லிபுரக் கோயிலடிப்பக்கமாக நடந்துசென்றேன். டிராக்டர் இரண்டு பருத்தித்துறைப் பக்கமாக மண் கொண்டுசெல்கின்றது. வேறொரு லொறி குடத்தனைப் பக்கமாக மண்கொண்டு போகின்றது. இன்னொன்று வதிரிப்பக்கமாக மண்ணினை ஏற்றிச் செல்கின்றது. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? மண்ணெல்லாம் வல்லிபுரக் கோவில் மண்ணாகுமா?

''கடல் கொண்ட கபாடபுரம்'' என இலக்கியத்தில் ஓர் அடிவருகின்றது. போகின்ற போக்கைப் பார்த்தால் வல்லிபுரத்தின் எதிர்காலம் என்ன?

-பாணபத்திரன்-

# அமெரிக்கா அருகே சோவியத் அணுசக்தி நீர்மூழ்கி விபத்து

வாஷிங்டன், அக் 5

அமெரிக்காவுக்கருகே மேக்கு அத்திலாந்திக் கடலில் 'பேர்முடா' தீவுக்கு 600 மைல்கள் வடகிழக்கே சோவியத்யூனியனின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ் விபத்தில் மூன்று சோவியத் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழக் கிழமை இவ்விபத்து இடம்பெற்றது. அணுசக்தி ஏவுகணைகளை இந்த சோவியத் நீர்மூழ்கி கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது ஆயினும் இவ் விபத்தினால் அணுசக்தி கதிரியக்கத் தாக்கமோ அல்லது வேறு பாதிப்புக்களோ இடம்பெறும் சாத்தியமில்லை என்று சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் பெரும் தீச்சுவாலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கத் தேடுதல் விமானமொன்று தெரிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான சோவியத் அணுசக்தி நீர்மூழ்கி 16 அணுசக்தி ஏவுகணைகளையும், 120 கடற்படைச் சிற்பந்திகளையும் கொண்டிருந்திருக்கலாம் என 'பென்ரகன்' அறிவித்துள்ளது

விபத்து இடம்பெற்றதும் தாமதமின்றி சோவியத்யூனியன் இதுகுறித்து அமெரிக்காவிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது ஆயினும் சோவியத் அறிவிப்பதற்கு நான்கு மணித்தியாலங்கள் முன்பதாகவே இது குறித்து அமெரிக்கா அறிந்து விட்டதாகப் பாதுகாப்பமைச்சர் திரு கஸ்பர் வெயின் பேக்கர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தஅணுசக்தி நீர்மூழ்கி ரகத்தைச் சேர்ந்த 25 நீர்மூழ்கிகள் உட்பட 300 சோவியத் நீர்மூழ்கிகள் அமெரிக்காவின் கடற் பிராந்தியத்தைச் சூழ வரவுள்ளன என்று அமெரிக்கப் பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

## உணவு பொருட்கள் அன்பளிப்பு

நெடுந்தீவு, ஞாயிறு

இலங்கை மெதடிஸ்த திருச்சபை கச்சேரி நல்லூர் வீதியிலமைந்துள்ள அகதிகள் முகாமிற்கு உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

அந்தி முகாமின் பொறுப்பாளர் திரு ஜீ ஆர். ஸ்டீவன்ஸின் வேண்டுகோளுக்கமைய திருச்சபையின் யாழ்ப்பாணச் சேகரக் குரு அருட்திரு கே பி கோவிந்தராஜா தலைமையிலான குழு மேற்படி பொருள்களை வழங்கியுள்ளது.

## பி. ரி. உஷா பெற்ற மூன்றுவது பதக்கம்

சியோல், அக்டோபர் 5

சியோலில் நடைபெறும் பத்தாவது ஆசிய விளையாட்டுக்களில் பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் இந்திய வீராங்கனை பி ரி உஷா முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றார் இத் தங்கப்பதக்கம் அவர் பெற்ற மூன்றுவது பதக்கமாகும். [சி]

## 'பனும்' பணிப்பெண்

# நீரஜா மிஷ்ராவுக்கு தீரச்செயல் விருது!

புதுடில்லி, அக். 5

கடந்த மாதம் பாகிஸ்தானில் இடம்பெற்ற அமெரிக்க 'பனும்' விமானக் கடத்தல் முறியடிப்பின்போது கொல்லப்பட்ட விமானப் பணிப்பெண் திருமதி நீரஜா மிஷ்ராவுக்கு இந்திய அரசு உயர் கௌரவம் வழங்கியுள்ளது

23 வயதான இப் பெண், அவ் விமானக்கடத்தல் நாடகத்தின்போது பயணிகள் தப்பிச்செல்வதற்கு விமானத்தின் அவசரவேளைக் கதவுகளை உரிய தருணத்தில் திறந்துவிட்டிருந்தார் என்று கூறப்பட்டது ஆயினும் இவர் விமானத்தினுள் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார்.

இந்தியாவில் தீரச்செயல்களுக்காக வழங்கப்படும் 'அசோகச்சக்கர' விருதே மரணத்தின் பின் திருமதி நீரஜா மிஷ்ராவுக்கு வழங்கப்பட்டது

திருமதி மிஷ்ராவுக்கு பாகிஸ்தான் கைதிகள் பாதுகாப்புச் சங்கமும், விசேட கௌரவம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இராணுவம் மீது கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து சுப்பிரமணியம் பூங்காபக்கம் வந்த இராணுவத்தினரை எதிர்த்து சென்றி நின்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளட்) போராளிகள் கைக் குண்டுகளை வீசினர் இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டனர்.

நேற்றுமுன்தினம்காலைஇடம்பெற்ற இச் சம்பவம் குறித்து 'புளட்'விடுத்துள்ள அறிக்கையில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ராஜீவ் கொலைமுயற்சி; துப்பாக்கி நபர் ஒரு சீக்கியர்

புதுடில்லி, அக் 5

'ராஜ்காட்'டில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மீது கொலைமுயற்சி மேற்கொண்டவர் ஒரு சீக்கியர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஓர் இந்து என முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளையடுத்து கரண்ஜித்சிங் என்ற பெயரையுடைய சீக்கியரே இந்நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர். பற்றிக் கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

இருபது வயதான இவர் பாகிஸ்தானில் 1984ம் ஆண்டு பயிற்சிபெற்றிருந்தார். மூன்று மாதங்களுக்கு முன்னரே இவர் இந்தியாவினுள் பிரவேசித்திருந்தார்.

புதுடில்லி வந்திருந்தபோது 1984ம் ஆண்டு பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொலையுண்டதையடுத்து ஏற்பட்ட கலவரங்களின்போது தமது நெருங்கிய நண்பர் ஒருவரும் கொலையுண்டதை இவர் அறிந்தார். இதற்குப் பழிவாங்கும் செயலாகவே பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொல்ல இவர் திட்டமிட்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்திய சுதந்திரதினத்தின்போது இவர் தமது எண்ணத்தை நிறைவேற்றத் திட்டமிட்டிருந்தார். ஆயினும் சூழ்நிலை சாத்தியமாகவில்லை.

தொடர்ந்து காந்திஜயந்திதினத்தில் கடந்த வியாழக் கிழமை இவர் தமது திட்டத்தை முன்வைத்துள்ளார். இதற்கென இவர் 15 டாலர்கள் பெறுமதியான சட்ட விரோத கைத்துப்பாக்கி ஒன்றையும் வாங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## உலகக் கிண்ண ஹாக்கிப் பந்தயம்

லண்டன், அக் 5

உலகக் கிண்ணத்துக்கான ஹக்கிப் போட்டிகள் லண்டனில் ஆரம்பமாகியுள்ளன

இப் போட்டிகளின் ஆட்டத்தில் உலக சாம்பியனை பாகிஸ்தானை ஆர்ஜன்ரீனா நேற்றுத் தோற்கடித்தது. 3-1 என்ற ரீதியில் ஆர்ஜன்ரீனா வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் சோவியத் யூனியனை ஒல்லாந்து 1 கோலகளால் வென்றது

பிரிட்டன் நியூசிலாந்தை 3-1 என்ற ரீதியில வென்றது இந்தியா போலந்துடன் தனது முதலாவது ஆட்டத்துக்கு தயாராகியுள்ளது.

திறமையான லங்கா அசொக் லேலண்ட் உதிரிப்பாகங்கள் சாதாரண விலையில் எம்மிடம் கையிருப்பில் உள்ளது.

விலை ரூ. 25/- முதல்

லங்கா அசோக் லேலண்ட் சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனுகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592

### மணிவாக்கு

ஒருவன் பைத்தியக்காரன் அல்ல என்றால் அவனுடைய எந்தத் தவற்றையும் திருத்திவிடலாம்; ஆனால் அவனுடைய தற்பெருமையை மட்டும் திருத்தவே முடியாது.

—ரூசோ

## நமது நோக்கு

# அமெரிக்க அதிபருக்கு ஏற்பட்ட பெருந்தோல்வி

தென்னாபிரிக்கா விடயத்தில் அதிபர் றீகன் கொள்கைக்கு ஏற்பட்ட தோல்வி அண்மையில் நடந்து முடிந்த அணிசேரா மாநாட்டின் நிலைப்பாட்டுக்குக் கிடைத்துள்ள வெற்றி என்று கூறுவது மிகப் பொருத்தமாகும்.

வெளிநாட்டு விடயங்களில் அமெரிக்க மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் பொதுவாக பதவியில் இருக்கும் அதிபரின் கொள்கைக்கு மறுப்புப் பேசினாலும் தீர்மானம் என்று வருகையில் அவரைக் கைவிட்டுவிடுவதில்லை. ஆனால் தென்னாபிரிக்காவிடயத்தில் கடந்த வாரம் காங்கிரஸ் சபையிலும், செனட்டிலும் றீகனுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியைப்போல் வேறு எவருக்கும் முன்பு ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை.

கடந்த வாரம் திங்கட்கிழமை அமெரிக்க காங்கிரஸ் சபையில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டவாக்கத்தை அதிபர் தமது 'வீட்டோ' அதிகாரத்தினால் இரத்துச்செய்தார். எனினும் சபை இந்த இரத்தை நிராகரித்துவிட்டது. இதேபோல் கடந்த வியாழனன்று செனட் சபையும் அதிபர் றீகனின் [வீட்டோ] இரத்து நடவடிக்கையை நிராகரித்த சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இதன்படி தென்னாபிரிக்காவிலிருந்து உருக்கு, இரும்பு, நிலக்கரி, யுரேனியம், புடவை, மற்றும் விவசாயப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்படும். தென்னாபிரிக்காவில் புதிதாக அமெரிக்கா முதலீடுகள் செய்வதும் கடன்கள் வழங்குவதும் நிறுத்தப்படும். இருநாடுகளுக்குமிடையில் விமான சேவை நிறுத்தப்படும் மேலும் கடந்த வருடம் றீகன் தமது நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் செயல்படுத்தியதங்க நாணய இறக்குமதி, அணுசாதன மற்றும் கம்ப்யூட்டர் நுட்பவியல் ஏற்றுமதித் தடையும் இச்சட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

கடைசி நிமிடத்திலும் அதிக கடுமையற்ற புதிய உடைவினைக்கொண்டு வருவதாக றீகன் தெரிவித்த கருத்தைக் கூட செனட் சபை நிராகரித்துவிட்டது.

றீகனின் 'வீட்டோ' பிரயோகத்தை செனட்சபை நிராகரித்ததானது உணர்ச்சியின்பாற்பட்ட நடவடிக்கை என தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் பிக்போத்தா வர்ணித்துள்ளபோதிலும், கடந்த ஒருவருடத்துக்குமேலாக தென்னாபிரிக்க விடயத்தில் காங்கிரஸ் சபைக்கும் றீகனுக்குமிடையில் பலத்த போராட்டம் நடைபெற்று வந்திருப்பதை அவதானிகள் மறந்து விடமாட்டார்கள்.

தென்னாபிரிக்காவின் கடைகெட்ட நிறத்துவேஷத்துக்கு எதிராக முழு ஆசிய ஆபிரிக்க மக்கள் மாத்திரமின்றி உலகின் பெரும்பாலும் சகல நாடுகளுமே கொதித்தெழுந்திருக்கும் வேளையில், ஆக அமெரிக்கத்தலைவரும், பிரிட்டிஷ்பிரதமரும், அவர்களைச் சார்ந்து நிற்கும் சில நாடுகளும் மாத்திரம் மிண்டு கொடுத்துக்கொண்டிருப்பதை அமெரிக்க மக்கள் விரும்பவில்லை என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

அண்மையில் ஹராரேயில் நடந்துமுடிந்த அணிசேரா நாடுகள் மகாநாடும், அதற்கு முன் பிரிட்டனில் நடந்த காமன்வெல்த் 'மினி' மகாநாடும் இதற்கு உறுதுணைபுரிந்துள்ளன எனலாம் அந்த மகாநாடுகளில் வெளியான கருத்துக்களும், ஐ நா. பொதுச்சபை விவாதங்களும் தென்னாபிரிக்கா விடயத்தில் அமெரிக்க நிர்வாகம் கடைப்பிடிக்கும் கொள்கையை முற்று முழுதாக வெறுத்து நிராகரித்துள்ளமை வெளிப்படை. இதனை அமெரிக்க காங்கிரஸும் செனட் சபையும் மனம் கொண்டு செயல்ப்பட்டுள்ளன.

வெளிநாட்டுக் கொள்கையொன்றில் இவ்வாறுபெருந்தோல்வியைத் தழுவியுள்ள அதிபர் றீகன் அடுத்து என்ன செய்வார் என்பதை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்

அடுத்தவாரம் கிறீன்லாந்தில் சோவியத் தலைவர் கோர்பச்சேவை சந்திக்கு முன் இந்தத் தோல்வியின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கான புதிய உத்தி எதனையும் கையாளக்கூடும் என எதிர்பார்க்கலாம்.

தென்னாபிரிக்கா விடயத்தில் றீகனைப் போலவே விடாப்பிடியாக நிற்கும் பிரிட்டிஷ் பிரதமரின் நடவடிக்கைகளுக்குஅடுத்துவரும் தேர்தலிலதான் பிரிட்டிஷ் பொதுமக்கள் தம் கருத்தை வெளியிடும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பிரதமருக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கும் நிலையில் இல்லை. பிரிட்டிஷ் மகாராணியே விரும்பாதவிடத்திலும்கூட பிரதமர் தம் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள மறுத்துவருகின்றார்.

இரு நாடுகளதும் அரசமைப்பின் தாற்பரியம் இதில் புலப்படுகின்றது.

எதுவானாலும், தென்னாபிரிக்காவிலும், நமீபியாவிலும் பிரிட்டோரிய வெள்ளையர் ஆட்சியின் கொடுங்கோலுக்குள்ளாகித் தவிக்கும் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அமெரிக்க மக்கள் தமது தலைவர்களின் நெருக்குதல்களையும் மீறி பங்களிக்கும் நிலைக்கு வந்துள்ளார்கள் என்பதை மறுக்கமுடியாது.

இதில் இன்னொரு விடயம் யாதெனில் அநீதிக்கு எதிராகப் போராடும் இனங்கள், அவர்கள் எந்த நாட்டவராலும் அமெரிக்க மக்களைச் சரியாக அணுகினால், அநீதியின் உண்மை நிலையை அவர்கள் உணரும்படி செய்ய முடிந்தால், அமெரிக்க அதிபரின் அதிகாரங்களையெல்லாம் கூட தூக்கி எறிந்து, அவரின் கொள்கையையே மாற்றி அமைக்கும் வல்லமையை அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதே அது.

# குடும்பக்கட்டுப்பாட்டை உடைக்கும் சிங்கப்பூர் - அரசு!

உலகினை உலுக்கிய சக்கரவர்த்தி மகாஅலெக்ஸாண்டர் அவர் ஐரோப்பிய நகரம் ஒன்றினை ஆக்கிரமித்துஇருந்தார். அந்த நகரை எரியூட்டாமல் இருக்க வேண்டுமாயின் அந்த நகரத்தில் உள்ளோர் ஐந்நூறு குழந்தைகளைத் தர வேண்டும் என்று தூது அனுப்பினார். ஆயினும் நகரம் எரிந்தாலும் குழந்தைகளைத் தர முடியாது என மக்கள் மறுத்துவிட்டார்கள் குழந்தைகளே குடிசனத்தின் விழிமலர்கள்.

திக்கவயல் **சி. தர்மகுலசிங்கம்**

சமீபத்தில் சிங்கப்பூர்ப் பிரதமருக்குப் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அந்த நாட்டில் 59% மக்கள் வயதானவர்களாக இருந்தமையை அவர் தேடிக் கண்டு பிடித்தார். எனவே புதிய சிங்கப்பூர்க் குழந்தைகள் தேவையென அவர் திட்டமிட்டார். அதன் பின்னணியில் 20 வருடங்களாக இருந்துவந்த குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் சவுமணி அடித்துள்ளார். சிங்பூரியன்களே குறைந்தது 2 மக்களைப் பெறுங்கள் 3 என்றால் மிகவும் சந்தோஷம்; இயலுமென்றால் 4 என அறிவித்துள்ளார்.

"At least two, better three; four if yon can afford it"

விரும்பிப் பெறும் பிள்ளைக்கு வெள்ளித் தட்டில் சோறு; விரும்பாத போது நடப்பதோ வேறு எனக் குடும்பக்கட்டுப்பாடு பற்றித் 'தமிழ்நாடு அரசு பிரசாரம் செய்கின்றது. ஆனால் சிங்கப்பூர் அரசோ திருமணம் செய்து புதிய குழந்தைகளைப் பெற்றுத் தரும் தம்பதியினருக்கு அவர்களின் பெற்றோரின் வீட்டுக்கு அருகாமையில வசதியான வீடு ஒன்றினை அமைத்துக் கொடுக்குமாறு வீடமைப்பு இலாகாவைப் பணித்துள்ளது இதனை A-Level வீடுகள் எனத்தரப்படுத்தியுள்ளார்கள். பிரமசாரிகளுக்கு கொடுக்கப்படும் வீடுகள் வசதிகள் குறைந்த O-Level வீடுகளாகக்கணிக்கப்படும். குடும்பக் கட்டுப்பாடு தேவையில்லையெனப் புதினப் பத்திரிகைகளும் ரீ வி யும்பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன.

சிங்கப்பூரில் படித்த பட்டதாரி மாணவிகள் திருமணம் செய்யாமல் இருந்து விடுகின்றனர் அத்துடன் தம்முடன் படித்த மாணவிகளைத் திருமணம் செய்யப் பட்டதாரி மாணவர்கள் மறுத்து வருகின்றனர். இவற்றினை நீக்குவதற்காக "Social Development Unit" ஒன்றினை அரசு நிறுவியுள்ளது. இதன்மூலம் மனமாற்றம் ஏற்பட்டுத் தம்பதிகளானோர் பலர் குடும்பக்கட்டுப்பாட்டுச் சட்ட நீக்க மூலம் 3 39 மில்லியன் குடிசனம் 2030ம் ஆண்டில் சிங்கப்பூரில் இருப்பர் என்று பிரதமர் லீ கருதுகின்றார்.

நன்கு படித்த வெளிநாட்டு வாலிபர்களைச் சிங்கப்பூரில் அனுமதித்து அங்குள்ள சிங்கப்பூர்ப் பெண்களுக்கு தாலிகாட்ட வைத்தால் என்ன எனவும் அரசு யோசித்து வருகின்றது. ஆயினும் இத்திட்டத்திற்குக் கடும் எதிர்பு இருக்கின்றது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. லீ குடும்பக்கட்டுப்பாட்டை நீக்குவதற்குச் சில உட்காரணங்களும் இல்லாமல் இல்லை. சிங்கப்பூர்க் குடிசனத்தில் சீனர்கள் 76% மலாயர்கள் 15% இந்தியர்கள் 6% இதில் விசேஷம் என்னவென்றால் இந்தியர்களும், மலாயர்களும் 2 குழந்தைகள் திட்டத்தை நன்கு அமுல் நடாத்திக் குடிசனத்தில் பெருகி விட்டார்கள். ஆனால் சீனர்கள் இதில் கவனம் செலுத்தியும் வெற்றி பெற முடியவில்லை. காரணம் சிங்கப்பூர்ச் சீனர்களின் குடிசனத்தில் 30% மாத்திரம் பெண்கள்; 70% ஆண்கள், எனவே சீனர்களின் பிறப்பு வீழ்ச்சி லீக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது எனவேதான் குடும்பக்கட்டுப்பாட்டை அவர் இப்போது வெறுப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

★ ★ ★

சிங்கப்பூரின் இன்றைய நிலையுடன் இலங்கையின் தமிழ் மக்களின் நிலையும் மனம் கொள்ளத்தக்கது. இங்கு தமிழர்களைப் பொறுத்த மட்டில் தரையாலும், வானத்தாலும் ஏவி விடப்பட்ட குண்டுகள் மூலம் தமிழ் மக்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள். சிறையில் அழிக்கப்பட்டார்கள்; போராட்டத்தில் ஆண்கள் தினமும் குறைந்து கொண்டிருக்கிறார்கள். சிங்கப்பூரில் எவ்வாறு சீனப் பெண்களுக்கு விகிதாசாரத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டதோ அதைவிட மோசமான நிலை தமிழ் மக்களுக்குள் ஆண்களுக்கு ஏற்பட இடம் உண்டு. இதைவிட அதிகரித்து வரும் சீதனக் கொடுமை, கல்யாண காலங்களுக்குக் கறுப்புக் கொடி காட்டி வருகின்றது இது ஒரு

[5ம் பக்கம் பார்க்க]

# கல்விக்கண்காட்சி கற்பிக்கும் பாடங்கள்

**க. கணேசலிங்கம்**

'எம்மை வாழ்க்கைக்குத் தயாராக்குங்கள், எமது தனி ஆற்றல்களைவளர்க்க உதவுங்கள், எம்மைப் புத்தகப்பூச்சி ஆக்காதீர்கள், பரீட்சைப் பெறுபேறுமட்டும் எம்மை முழுமனிதனுக்காது, நாமாகவே சிந்திக்க அனுமதியுங்கள் எம்மை அடிப்படை அறிவு பொருளாதாரவளம் சமூ நீதியுணர்வுள்ள முழுமனிதனுக்குங்கள். செயல் மூலம் உணர்தலே சிறந்தகற்றல், செயல் மூலம் உணர்விப்பதே சிறந்த கற்பித்தல், கைத்தொழில்களில் ஈடுபடுவது தாழ்வல்ல அதுபெரும் உயர்ச்சிக்கு வழி. உடல் உளநலமனப்பாங்கு விருத்தியே எமக்குவேண்டும் எமது விருப்பத்துக்கும் ஆற்றலிற்கும் ஏற்ற தொழில் ஒன்றை தெரிவு செய்துபொருளாதார வளம்பெருக்கஎமமை அனுமதியுங்கள்'

கல்வித்துறையில் இப்போது மாணவர்கள் விரும்புவது இவைதான்.

இராமநாதன் கல்லூரியில் சமீபத்தில் நடைபெற்ற மானிப்பாய் வட்டாரக்கல்விப் பொருட்காட்சியின் ஒருகாட்சி மண்டபத்தில் இந்த வசனங்கள் எழுதப் பட்டிருந்தன வாழ்க்கைத்தன் கல்வி என்ற பகுதியிலேயே இதனைக்காண முடிந்தது. இந்தமண்டபத்தினுள் மாணவிகள் சைக்கிள் டியூப்களின் துண்டுகளை ஒட்டிக்கொண்டிருந்ததும் அவதானிக்க முடிந்தது. பலவிதகைக் குட்டைகள், பலதேவைகளுக்கான பைகள், பல்நோக்குத் தூரிகை, காலைவேளைக்கான நிறை உணவு. இப்படிப் பலவிதப்பொருள்களையும் இந்த மண்டபத்தில் பார்வைக்கு தயாரித்துவைத்திருந்தார்கள்.

'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்பார்கள் நாம் தேவையற்றவை என வீசி எறியும் பொருள்களெல்லாம் கற்பனைத்திறனோடு பயன்படுத்தப்பட்டால் எவ்வளவு பயன்பாடுடைய பொருளாகமாறும் என்பதை இக் கல்விக்கண்காட்சியில் நன்கு காணமுடிந்தது

சோடாமூடிகள்,காட்போட் வெற்றுப்பெட்டிகள் ஐஸ்கிறீம் சாப்பிட்டுவிட்டு வீசி எறியப் படும் சிறிய 'கப்'புகள் போல் பொயின்ட் பேனைகளின் மை தீய்ந்துபோன குச்சிகள். நெருப்புக்குச்சிகள் இவையெல்லாம் மிகவும் பிரயோசனமான பொருள்களாக கண்காட்சியில் மாற்றப்பட்டிருந்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

# சக்தியின் பெருமை

## கௌரீதசகம்

அலகிலு கண்டமவை யனைத்துமெவள்
வயிற்றடங்கி
விலகலின்றி வெளிவந்து விரிந்திடுமத்
தகையவருள் மேவுமன்னை
குலவுபெரு நேயமுறு கொழுநனுடன்
வெள்ளிமலை குலவுந் தேவி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை
கௌரியையா னிறைஞ்சு கேனே

பொருள்: எண்ணிறந்த உலகங்களும அண்ட கோளமுமாகிய அனைத்தும் எவருடைய வயிற்றிலே ஒடுங்கி மீண்டும் மீண்டும் தோன்றி விரிகின்றனவோ அத்தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாகிய திருவருளம்மைதான் பேரன்பு கொண்ட சர்வலோக நாயகருடன் வெள்ளிமலையில் திருவிளையாடல் புரிபவள். தாமரை மலர் போன்ற கண்களையுடையவள் அன்னை கௌரி. அவளையான் போற்றித் துதிக்கிறேன்.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

# கல்விக் கண்காட்சி . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கண்காட்சியில் விஞ்ஞான-கணிதவிந்தைகள், அறிவுக்கு விருந்தாகும் அற்புதப் பரிசோதனைகள் உடலைவாட்டி வதைக்கும் எய்ட்ஸ் (AIDS) போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான காரணிகள், தடுக்கும் விதங்கள் பலரும் பயனடையக் கூடிய வர்த்தகம் விவசாயம் மெஞ்ஞான விளக்கங்கள், கலை, இலக்கியம், இசை, நடனம், ஓவியம், மனையியல், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நவீன தொழில் நுட்பம் இப்படி பல் வேறுபட்ட துறைகளை உள்ளடக்கிய சாதனங்கள், பொருள்கள், உபகரணங்கள் எல்லாம் பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஆரம்பப்பிரிவு பகுதியில் பொருள்கள் தாராளமாக இருந்ததால் இடம்போதாமை ஆங்காங்கே தெரிந்துகொண்டிருந்தது. இராமநாதன் மகளிர் கல்லூரி இன்னமும் விஸ்தரிக்கப்படலாம்.

வைத்தியத்துறைப்பகுதியில் 'உங்கள் கண்கள் உங்களிலேயே தங்கியுள்ளது என எழுதப்பட்ட வாசகம் பலரது பார்வையையும் கவர்ந்து கொண்டிருந்தது. இருதயத்தின் குறுக்குவெட்டுமாதிரி சிமெண்டினால் செய்யப்பட்டிருந்தது இருதயம் மட்டுமல்ல சிறுநீரகம் எப்படி வேலை செய்கின்றது என்பது போன்ற விளக்கங்களையும் மாணவர்கள் விளக்கிக்கொண்டிருந்தார்கள்.

நட்சத்திரங்களைப் பார்க்கக் கூடிய வானியல் தொலைகாட்டி மாணவர்களாலேயே செய்ப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. எங்கெல்லாம் நாம் சென்று கொண்டிருக்க முயல்கின்றோம் என்பதை இக் கண்காட்சி ஓரளவு தெரிவித்துக்கொண்டிருந்தது.

மாணவர்களின் முயற்சி கற்பனை, ஆராய்ச்சி மனோபாவம், திறன் இவற்றை வெளிக்கொணர இவ்வித கண்காட்சிகள் மிகவும் உதவும் என்பதையும் அனுபவபூர்வமாகப் பார்க்கமுடிந்தது.

சமூக கல்விப் பிரிவி ஒரு பெரிய மண்டபத்தைப் பிடித்துக்கொண்டிருந்தது. நன்னீர் மீன்வளர்ப்பு. விவசாய நிலபுலன்கள், நீர்வளம், நிலவளம், முழுத்தேங்காயில் முழு இலங்கையின் வர்ணப்படம். காற்றுடிமூலம் தோட்டங்களுக்கு நீர் இறைக்கும் மாதிரிகள் இவற்றையெல்லாம் அங்கு காணமுடிந்தது.

ஓவியப்பகுதியில் இன்றைய மாணவர்களது உளக்குமுறல்களை வெளிப்படுத்தும் பல சித்திரங்களைக் காணமுடிந்தது. தற்கால சித்திரப்படத்துக்கு ஏற்ற செயல்முறைகள் காட்டப்பட்டிருந்தன அச்சுப் பதித்தல் வர்ணச் சேர்க்கை என்பனவும் இங்கே இடம் பெற்றிருந்தன.

இசை நடனம் பகுதியில் தில்லை நடராஜரது ஆனந்த தாண்டவத்தைப் பார்த்து பரவமடையக் கூடியதாக இருந்தது. 108 கரணங்கள் விளக்கப்படங்கள் தெய்வீகக் கலையைத் தெளிவுபடுத்தின.

ஆங்கிலக் கல்வியின் அவசியம்பற்றி ஆங்கிலப்பகுதி மண்டபத்தில் அறியக் கூடியதாக இருந்தது. ஆங்கிலம் தெரியாதவர்கள் வர்த்தகர்கள் சிலர் எவ்வாறு ஏமாற்றுகிறார்கள் என்பதையும் பார்க்கமுடிந்தது. இங்கிலாந்தில் செய்யப்பட்டதென நினைத்து ஒருவர் பொருளை வாங்குகின்றார், ஆனால் அப்பொருள் அங்கு செய்யப்படவில்லை என்பது ஆங்கிலம் தெரிந்தவரால் விளக்கப்பட்ட பின்னர்தான் புரிந்து கொள்ள முடிகிறது. Enland க்கும் England க்குமிடையே எவ்வளவு தூரம் வித்தியாசம்! ஏமாற்றப் படாமலிருப்பதற்கும் கல்வி தேவைப்படுகிறது.

இவ்வித பலவித விஷயங்களை உணரவைக்க இத்தகைய கண்காட்சிகள் உண்மையில் உதவவே செய்யும். ஒரிரு நாட்களல்ல ஒருவாரம் தொடர்ந்து நடந்தால் கூட பயன் கூடுதலாகவே இருக்கும்.


## கடைசி நேர வரி விளம்பரம்

## தேவை

மெழுகு திரியும், அப்பளமும் தயாரிப்பதற்கு ஆண்களும், பெண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ஸ்ரீ கிருஷ்ணாமில்ஸ், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[C 5033]

வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30

பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த

**Space Hunter**

(Adults only)

Sex-Action-Thrill

லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு - நளினி நடித்த

புதிய வெளியீடு கள்

**நியாயம்**


## குடும்பக்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் குடும்பக் கட்டுப் பாட்டையே அமுல் நடாத்தி வருகிறது.

அதிக பணம் இருப்போர் இங்கு அதிக பிள்ளைகள் பெற விரும்புவதில்லை. பணம் இல்லாதோர் அதிக பிள்ளைகள் பெற்றும் வளர்க்க முடியாது ஏங்கி நிற்கின்றனர். அதிக பிள்ளைகள் பெறுபவர்கட்கு எயது சமுதாயம் உதவி புரியமுன் வராதவிடத்து நமது சமுதாயத்தை அழித்த பெருமை எமக்கு வந்து சேரும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

ஆண்களே இல்லாத சில கிராமங்கள் கிழக்கிலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. எம் மத்தியில் எழக்கூடிய குடும்பக்கட்டுப்பாடுஇப்போது தோன்றியுள்ள நெருக்கடியை மேலும் இலகுவாக்கும்.

வெளிநாட்டிற்கு ஆண்கள் ஓடுதல், யுத்தபீதியால் பெண்கள் கருத்தரியாது இருத்தல் என்பன அரசு எமக்கு இப்போது வழங்கியுள்ள இரு கருத்தடைவளையங்கள். சிறுபான்மை மக்களாகிய நாம் சிங்கப்பூர் பிரதமர் லீயின் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள் ஏழாலை கண்ணகை அம்பாள் தேவஸ்தான முன்னாள் பிரதம பூசகர் அருள்மிகு தா. கார்த்திகேசுஐயா பெயரால் ஸ்தாபிக்கப்பட்ட (சமாதி) இலிங்கப் பெருமானுக்கு ஆண்டுப்பூர்த்தியையொட்டி இன்றுநவோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது

மேலும் நினைவுரைகள் சிறப்புரைகளும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறவுள்ளன (மா)

## திப்பு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இக்குழுவின் கூட்டம் இடம் பெற்றது; இக்கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

திப்புவில் வைக்கப்பட்ட 4 அம்சக் கோரிக்கைகள் வருமாறு:

தமிழ்பேசும் மக்கள் தேசிய இனமென்பதை அங்கீகரித்தல்,

அவர்களின் பாரம்பரியப்பிரதேசம் அவர்களுக்கே சொந்தம்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

மலையக மக்களின் குடியுரிமை வழங்கல். அத்துடன் அவர்களின் உடமையும் அவர்களுக்கே சொந்தம்.

இக்கோரிக்கைகளை தென் இலங்கையிலுள்ள அனைத்து முற்போக்குச் சக்திகளும் ஒருங்கிணைந்து தென்இலங்கை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் மேற்படி குழு கேட்டுள்ளது. [கே]

## தமிழினத்துக்கு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் உருவாக்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

ஒரு புதிய கல்வித் திட்டத்தை உருவாக்குகையில் நடைமுறையிலுள்ள கல்வித் திட்டத்தை நாங்கள் பல முறைகளில் ஆராய வேண்டியுள்ளது. இன்றைய கல்வித் திட்டம் மாணவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியிலும் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை நாம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இதன் ஆரம்ப கட்டமாகச் சில கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளோம் இந்த வரிசையில் எமது முதலாவது கருத்தரங்கு கடந்த 4ம், 5ம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாடங்களையொட்டிய கருத்தரங்காக இருந்தது. இதில்ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்தும் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவுகளிலிருந்தும் தலா மூன்றுபேர் வீதம் கலந்து கொண்டனர். சனிக்கிழமை கலை, வர்த்தக பிரிவுகளுக்கான கருத்தரங்குகள் நடைபெற்றன இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைத்துறைப் பீடாதிபதியின் ஆரம்ப உரையுடன் ஆரம்பித்தது.

ஞாயிற்றுக்கிழமை விஞ்ஞானம, கணிதம் ஆகிய பிரிவுகளுக்கான கருத்தரங்குகள் நடைபெற்றன. இது யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத் துறை பீடாதிபதியின் ஆரம்ப உரையுடன் ஆரம்பித்தது.

இக்கருத்தரங்கு கல்வியின் நடைமுறைப் பயன்பாட்டை மையமாகக் கொண்டிருக்கும் அதாவது நாம் கற்கும் கல்வி சமுதாய வளர்ச்சிக்கு எவ்வாறு பிரயோகிக்கப்படலாம் என்பதைக் கருவாகக் கொண்டமையும்.

இதனைத் தொடர்ந்து அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டத்திலும் பல கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இவற்றினூடாக இன்றைய கல்வியமைப்பினை மாணவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளவிதம், கல்வியமைப்பிலுள்ள குறை நிறைகள், பிரத்தியேக கல்வி நிலையங்கள்பற்றி விரிவாக ஆராயப்படும்.

இதனைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மட்டத்தில் தொடர் கருத்தரங்குகள் நடைபெறும். இவற்றில் புதிய கல்வித் திட்டம்பற்றிய ஆய்வுகளும், அதன் தன்மைகளைப்பற்றியும் விரிவாக ஆராயப்படவுள்ளன.

## பருத்தித்துறையில் ---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக்காலை 10 மணியளவில் பருத்தித்துறை ராணுவ முகாமிலிருந்து 100க்கு மேற்பட்ட ராணுவத்தினர் சுப்பர் மடத்தை நோக்கி புறப்பட்டனர். இவர்களை நோக்கி மக்கள் விடுதலைப் படை வீரர்கள் நவீனரக மோட்டர் கொண்டு ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது பல ராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன் சிலர் படுகாயமுமடைந்தனர். மக்கள் விடுதலைப்படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாதராணுவத்தினர் பல இழப்புக்களுடன் முகாம்திரும்பினர். எமக்கு அருகாமையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகப் போராளிகளும் தாக்குதல் நடத்தினர். (ஊ)

## இன்று---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெனத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக வடபிராந்திய லொறிப்போக்குவரத்துச் சேவை ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:

வடபிராந்திய லொறிப் போக்குவரததுச்சங்கம், யாழ். முஸ்லிம்போக்குவரத்து ஒன்றியம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு முதலாம் திகதி முதல் நடைபெற்றுவந்த தூர லொறிச் சேவை நிறுத்தம் தொடர்பாக ஆராய்வதற்கு நேற்றுக்கூடியது. இக்கூட்டத்தில் ஈரோஸ், தமிழீழமக்கள் விடுதலைக்கழகம், தமிழீழவிடுதலைப்புலிகள், தமிழீழ இராணுவம் ஆகிய போராளிகள் அமைப்புகளும்பங்குபற்றினர்.

தூர லொறிச்சேவை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், லொறிக் கடத்தல், வழிப்பறிக்கொள்ளை சம்பந்தமாகக் கண்டணம்தெரிவித்துப் விடுதலை அமைப்புகள் வெளியிட்ட அறிக்கைகள் இந்தநிர்வாக குழுகூட்டத்தில் ஆராயப்பட்டது.

மேலும் இவ்வாறான கொள்ளைகள், கடத்தல்கள் நடைபெறாதவாறு தாம் பார்த்துக் கொள்வதாகவும், அப்படி நிகழும்பட்சத்தில்நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒத்துழைப்பு வழங்குவதாகவும் விடுதலை அமைப்புகள் சார்பில் பங்குபற்றிய பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

இந்த உறுதிமொழிகள் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மேற்படி சங்கங்களின் பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை ஏற்றுக்கொண்ட பொதுச்சபை இன்று மாலை 6 மணியிலிருந்து தமதுபோராட்டத்தைக் கைவிட்டு சேவைகளை ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளது.

தமது போராட்டத்திற்கு ஆதரவும், ஒத்துழைப்புமளித்த பொதுமக்கள், வர்த்தகர்கள், விடுதலை அமைப்புகள், வெகுஜன அமைப்புகள் ஆகியவற்றிற்கும் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (கே)

## ரமேஷ்---

[1ம் பக்கத்தொடர்ச்சி]

தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

கடத்தப்பட்ட ரமேஷ், நகுலன் எங்கே? கடத்தியவர் யார்? கடத்தப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள். அல்லது மக்கள்முன் பகிரங்க விசாரணைக்குட படுத்துங்கள். இதற்கு தகுந்த பதிலளிக்காவிட்டால் எமது போராட்டம் தொடரும்.

இதுவரை காலமும் நாம் ஜனநாயக உரிமைகளுக்காகவும். அராஜக நடவடிக்கைகளுக்கெதிராகவும், ஐக்கியத்திற்காகவும் போராடிவந்துள்ளோம். அராஜகம் எங்கிருந்து தோன்றினாலும நாம் அதற்கெதிராகப் போராடியே தீருவோம்.

இதனிடையே இவர்கள் இருவர் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து நேற்று ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து காலை புறப்பட்ட ஊர்வலம் மகாஜனக் கல்லூரி வீதிவழியாகச் சென்று விளான்சந்தி, இளவாலை பெரிய கோவிலில் பிற்பகல் முடிவுற்றது இவ் ஊர்வலத்தில் சுமார் 200 பேர் வரை கலந்துகொண்டனர். (ஊ)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



துரைரத்தினம் ஜெயரூபன்

[லெப்டினன்ட் சாம்]

தமிழீழ மண்ணில் உதயம்: 27-04-1962

தமிழீழ மண்ணில் அஸ்தமனம்: 06-10-1985

சரித்திரத்தில் தமிழீழ வீரவரலாற்றிலுன் பேர் சித்திரமாய் வடித்திடுவோம்!

சிலையெடுப்போம்!

சிறுவர்க்கு உத்தமனே உன்பெயரைச் சூட்டி நினைவுகொள்வோம்

எத்தனை இன்னல்கள் இழப்புகள் மத்தியிலும் எழில் தமிழீழம் அமைப்பேம்

நீ நித்திரை கொள்.

நண்பர்கள், உறவினர்கள், பொதுமக்கள்

(C5035) ஏழாலை:

## வீடியோ புளொசம்ஸ்

### இன்றைய எமது வெளியீடுகள்

1. என்றுவது ஒருநாள் [தரமான பிரதி]
   நரேஸ்குமார், மாதுரி, செந்தில், கல்லாப்பெட்டி சிங்காரம், N M ராஜம்;
2. ஜிது ஜிது ரயில் (Orignal)
3. இரவுப் பூக்கள் (Orignal)

உங்கள் இல்லங்களில் நடைபெறும், திருமண, பிறந்த தின விழாக்களுக்கும் ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் வீடியோ, கலர் புகைப்படம் பிடிப்பதற்கும் புகைப்படங்களை பிரதி செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

**வீடியோ புளொசம்ஸ்**

No: 30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்

(C 5032)

# "அழிவுகளின் மத்தியிலும் மாகாணசபைகளா?"

நெல்லியடி, ஞாயிறு

"ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் இன விரோத அடக்குமுறைகளில் ஈடுபட்டதன் விளைவே, இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிர்வாக ஸ்தம்பிதமாகும். இத்தனை அழிவுகளின் மத்தியிலும் மாகாண சபைகள் பற்றியோ, மாநில சுயாட்சி பற்றியோ பேசுவது நகைப்புக்கு இடமானது."

இவ்வாறு கரவெட்டி அர்ச் அந்தோனியார் ஆலய முன்றலில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்துப் பேசிய முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் திரு. இ. முத்துத்தம்பி கூறினார்.

பருத்தித்துறைப் பங்குத் தந்தை அருட்திரு பெனிவஸ் அடிகளார் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து ஆசிர் வதித்தார். பருத்தித்துறை பிரஜைகள் குழு ஒன்றியத்தின் தலைவர் திரு. ஜே ஜீ இராசேந்திரம் பேசுகையில் இந் நாட்டின் ஜனாதிபதி அகிம்சை முறையிலேயே உரிமைப் போராட்டம் நடத்தப்படல் வேண்டுமென அடிக்கடி கூறிவருகிறார். ஆனால் இன்று மரணத்தின் விளிம்பில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் சிறைச்சாலை உண்ணாவிரதிகளுக்கு அவர் கூறும் பதில் என்ன? எனக் கேட்டார். [வா]

0 0 0

பளை, ஞாயிறு

வெலிக்கடையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக பளை சந்தைமைதானத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள், சிறுவர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், பாடசாலை மாணவ மாணவிகள் ப.நோ.கூ. சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அன்றையதினம் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்ட கோஷங்கள் எழுதிய சுலோக அட்டைகள் ஏந்தியவண்ணமிருந்தனர். [வா]

## உண்ணாவிரதம் அனுஷ்டிப்பு

அராலி, வெள்ளி

வெலிக்கடை, பூஸா முகாம்களில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக குளவையூர் ஞான வைரவ கோவில் மண்டபத்தில் நூற்றுக்கணக்கான குளவையூர் மக்கள் பங்குபற்றி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். ஜனாதிபதியின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

## சித்தாந்த வித்தகர் சின்னத்துரை

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செ. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள் தமது இளம் வயதிலே சைவசித்தாந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்று அவற்றில் சிறந்த வித்தகராக விளங்கினார். இவர் ஆங்கிலத்திலும் BA பட்டம் பெற்றவர். இவரது ஆசிரியத் தொழில் மகாஜனக் கல்லூரியில் இடம் பெற்றது அன்றைய அதிபர் அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கட்குப் பக்கபலமாக நின்று யேற்படி கல்லூரியில் சைவ மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் மாணவர்கள் இளம் வயதிலே சைவ சமய நூல்களைக் கற்க வேண்டும்' ற்றவாறு ஒழுக வேண்டும் என்பதேதமது இலட்சியமாகக் கொண்டவர் சைவ சமய வளர்ச்சிக்காக அல்லும் பகலுமாக உழைத்த உத்தமர். இத்தகைய பெருமைக்குரியவர் பரமகள் புதன்கிழமை அமரத்துவம் எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோர் அநேகர்.

எமது தந்தையார் அவர்கள் 1946ம் ஆண்டிலே பாலர் ஞானோதைய சபையை ஆரம்பித்தார் சபையின் ஆரம்ப காலந்தொட்டு அதன் வளர்ச்சிக்குப் பல பெரியார்கள் உறுதுணையாக விளங்கினார்கள். அத்தகைய பெரியார்களுள் ஒருவராக விளங்கியவர் அமரர் செ சின்னத்துரை அவர்களாகும். அஞ்ஞான்று நடைபெறும் பரிசு விழாக்கள் குருபூசைகள், பேச்சுப் போட்டிகள், சமயபாடப் பரீட்சைகள் எதுவானாலும் ஆசிரியர் செ. சின்னத்துரை அவர்கள் பங்குபற்றத் தவறுவதில்லை. சில பரிசு விழாக்கள் அன்னாரின் நன்கொடையுடனேயே நடைபெற்றன அத்துடன் இவ்விழாக்களுக்கு எல்லாம் கால் நடையாகவே வருவார்.

சபையின் 35வது ஆண்டு விழா நடைபெற்ற போது அன்னாரையும் அழைத்திருந்தோம். உடல்நலக் குறைவு காரணமாக வருகை தர முடியவில்லை. திரு.ம.சி சிதம்பரப்பிள்ளை மூலம் நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்ட முக்கிய விடயம் "நல்லெண்ணங்களைச் சிறுவர் மத்தியில் விதைத்தால் சிவதொண்டின் விளைவைக்காணலாம்." இது எம் சபைக்கு என்றும் ஓர் அறிவுரையாக அமைகின்றது.

மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் விளங்க அருந்தொண்டாற்றிய வித்தகரைச் சைவ உலகம் இழந்து விட்டது.

சி.கணேசலிங்கக் குருக்கள்,

## செபமாலைத் தாயே

ஆண்டுகள் முழுவதும் அயராதிருந்து
அன்பொடு கருணை புரிந்திடும் அன்னையே! அதர்மப்
பீடையால் மாண்டிடும் அகிலத்தை இரட்சிக்க
கோடையில் மாரியாய் பொழிவாய் பொய்கையே
ஆதவன் சதிரென அணைத்திடும் அமலியே!
காதலா யுடுவிலில் அவர் எழிற்கமலமே!
பாதகர் ஈனர் படைத்து ஒதுங்க
மாதரசியே எம்மண்ணை மீட்பாயே!
வேதனைகள்வேக; தமிழர்வெற்றி துலக்குவாய்
வேளாங்கன்னியே! செபமாலைத்தாயே!

தே. ச. வில்சன்

## அன்பளிப்பு

நெல்லியடி, ஞாயிறு

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நேற்று முன்தினம் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆசிரியர் மாணவரின் உபயோகத்துக்கென ஒரு வருடகால "ரீடேஸ் டைஜெஸ்ற்" தொகுப்பு ஒன்றினை கல்லூரி அதிபர் திருமதி எஸ். அரியரத்தினத்திடம் வழங்கியது. (வா)

## வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சியில் கடந்த யூலை மாதம் ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து மூடப்பட்டிருந்த கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் வகுப்புக்கள் கிளி. சென். திரேசா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற அம் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம் எம். மன்சூர் நடவடிக்கைகள் எடுத்துள்ளார். இவ் வகுப்புக்கள் நாளை 6ம் திகதிமுதல் நடைபெறவுள்ளது

கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்தில் தொடர்ந்து தமது கல்வியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களும் இப்பிராந்தியத்தை விட்டு வேறு இடங்களுக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்து சென்றமாணவர்களும் சென் திரேசா மகளிர் மகா வித்தியாலயத்தில் இயங்கும் கனிஷ்ட மகா வித்தியாலய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஊ]


## பிரயாண ஒழுங்குகள்

ஹொலண்ட் — பெல்ஜியம்
ஜேர்மனி — பிரான்ஸ்
சுவிற்சலண்ட் — டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.
பாஸ்போட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
[ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை]
உடுவில் கிழக்கு, உடுவில். A 1372



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் — கனடா — ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர் கொழும்பில் இருந்து நேரே அழைத்துச் செல்வார்.

சிங்கப்பூர் — Housemaid; Railway Underground General Workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

சவூதி - Kuwait ஆகிய நாடுகளுக்கும் வருமான வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC
(அடைக்கலமாதா கோவில் பின் பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A - 1384)


## யாழ். அபிவிருத்திச் சபை அறிவித்தல்

1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி காலை 10 00 மணி வரை யாழ் அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிட திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைகளங்கள் / கூட்டுத்தாபனங்களின் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10 10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச் சபை உபஅலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்ட (தொகை தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| 1. | தெல்லிப்பளை | பஸ்நிலையம் அமைத்தல் | 40,000-/ | 50/- | 25/- |
| 2. | மல்லாகம் | உப அலுவலகக் கட்டிடம் | 100 000/- | 100/- | 50/- |
| 3. | கோப்பாய் | உப அலுவலகக் கட்டிடம் | 110 000/- | 100/- | 5 /- |
| 4. | அச்சுவேலி | சந்தைக் கட்டிடம் | 400 000/- | 250/- | 125/- |
| 5 | நல்லூர் | உபஅலுவலகம் 2ஆம் கட்டம் | 75 000/- | 100/- | 50/- |
| 6. | காரைநகர் வடக்கு | உபஅலுவலகக்கட்டிடம் | 110,000/- | 100/- | 50/- |
| 7. | அச்சுவேலி | மரக்கறிச்சந்தைக்கட்டிடம் 1-ம் கட்டம் | 40,000/- | 50/- | 25/- |
| 8. | மயிலிட்டி | வீமன்காமம் சந்தைக் கொட்டில் | 50 000/- | 50/- | 25/- |
| 9. | முள்ளிப்பற்று | நூல்நிலையம் | 30,000/- | 50/- | 25/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நிர். ச. வேலை)
யாழ். அபிவிருத்திச்சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[A 1433]


## பிரயாண ஒழுங்குகள்

குவைத்

| | |
|---|---|
| V. சிவானந்தன் | புங்குடுதீவு |
| P. யேசுதாசன் | H 298549 |
| S. ஜெயபாலன் | F 252250 |
| J D ராஜசேகரம் | G 0343328 |
| M. யோகநாதன் | F 019118 |
| S ஐயன்கரன் | H 035975 |
| K. சிவகுகன் | H 0459989 |
| S முருகானந்தன் | H 0366706 |
| M. J விறிகாட் | G 0324752 |
| K. யேசுதாசன் | H 0460910 |
| P. பரமேஸ்வரன் | H 0478 4 |
| S. தேவராஜன் | H 0104191 |
| M. யோகநாதன் | F 019118 |
| A. M. விஜன்குருக்கிரியதாஸ் | H 0316064 |
| S. M. ஆனந்தராஜா | H 0117679 |

மேற்குறிப்பிட்டிருக்கும் நபர்களுக்கு Kuwait விசா கிடைத்து விட்டது காரியாலயத்தில் சந்திக்கவும். உடன் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

GROUP ATLANTIC
அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A 1385]

# ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/5775 இலக்க வழக்கில் வாதி காங்கேசன்துறை தையிட்டி நாகலிங்கம் இராசையாவுக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத்தொகை 5302/-ரூபாவும் மேலும் இதில் 4820/-ரூபாவுக்கு 23-7-1984 தொடக்கம் 5 2-1986 வரை வருடமொன்றுக்கு 10%வீத வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச்செலவு 4345 ரூபா 70 சதமும் விற்பனவுச் சலார்களும். இத்தொகையை பிரதிவாதிகளாகிய தெல்லிப்பழை கட்டுவன் மேற்கு சின்னையா சண்முகரத்தினத்திடமும் பெண் இன்பமலரிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன் கீழ் விபரிக்கப்படு மாதனம் 1986ஆம் ஒக்ரோபர் மீ 28உ (28-10-1986) முற்பகல் பத்துமணி தொடக்கம் குறித்த இவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவில்பற்று கட்டுவனிறை ''வேல் வாங்கி சீமா'' நில. பர. 8 இதில் தெற்குப்பக்கமாக நில பர இரண்டும் வீடும், வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும், தூர்வைப்பங்கும், துலா ஆடுகாற்பங்கும் எல்லைகிழக்கு கிணறும் கந்தன் பசுபதிக்குரிய ஆதனமும் வடக்கு வேலன் இரத்தினத்திற்குரியாதனம் மேற்கு தம்பன் சதாசிவத்திற்குரியாதனம் தெற்கு தில்லையம்பலம் அப்புத்துரையினுதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசிக்காணியும் வீட்டில் மேற்குப்பக்கமாகவுள்ள அறை நிந்தமாகவும் அதற்குரிய விறுந்தையும், இதடங்கலில் பொதுப்பாவிட்டு முழுக்காணியிலிருந்து விடப்பட்ட வழிவாய்க்கால் புறநீங்கலாக மிகுதியாவும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
643, கே. கே. எஸ். வீதி, விற்பனை ஆணையாளர்.
யாழ்ப்பாணம். [C-5023]

---

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின்

# கேள்வி அறிவித்தல்-1987

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1987ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1987ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி வரை குத்தகைக்கு வாடகைக்கு விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22-10-86ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ். அபி சபை செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் உரிய தொகையைச் செலுத்திய பின்னர் அவ்வவ் உப அலுவலகங்களால் 21-10-86ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். மூலப் பிரதி யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்திலும், இணைப்பிரதி உரிய அலுவலகத்திலும் 22-10-86ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய முழு விபரங்களையும் கேள்விப் விப்பத்திரப் பெறுமதி, கேள்விப் பிணைத் தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ். அபி. சபை அலுவலகம், யாழ்ப்பாணம். — செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

### உப அலுவலகங்களின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை | 28. | நெல்லியடி |
| 02. | மானிப்பாய் பட்டினம் | 29. | கிளிநொச்சி |
| 03. | உரும்பிராய் ஊரெழு | 30. | கொக்குவில் |
| 04. | உடுப்பிட்டி | 31. | நல்லூர் |
| 05. | நாரந்தனை | 32. | தெல்லிப்பளை |
| 06. | மல்லாகம் | 33. | மயிலிட்டி |
| 07. | மானிப்பாய் கிராமம் | 34. | அச்சுவேலி |
| 08. | ஏழாலை | 35. | நீர்வேலி |
| 09. | உடுவில் | 36. | சுழிபுரம் |
| 10. | கோப்பாய் | 37. | பருத்தித்துறை |
| 11. | அனலைதீவு | 38. | நயினாதீவு |
| 12. | நெடுந்தீவு | 39. | வட்டுக்கோட்டை |
| 13. | வேலணை | 40. | மண்டைதீவு |
| 14. | எழுவை தீவு | 41. | அல்வாய்ப்பிட்டி |
| 15. | காரைநகர் வடக்கு | 42. | புங்குடுதீவு |
| 16. | அராலி | 43. | பண்டத்தரிப்பு கிராமம் |
| 17. | காரைநகர் தெற்கு | | |
| 18. | கட்டைவேலி | 44. | புத்தூர் |
| 19. | குடத்தனை | 45. | செமபியன்பற்று |
| 20. | நாவற்குளி | 46. | சச்சாய் |
| 21. | முள்ளிபபற்று | 47. | கைதடி |
| 22. | இரணைதீவு | 48 | மிருசுவில் |
| 23. | புலோலி | 49 | வரணி |
| 24. | சங்கானை | 50 | சாவகச்சேரி |
| 25. | பண்டத்தரிப்பு பட்டினம் | 51. | பூநகரி |
| | | 52. | பல்லவராயன்கட்டு |
| 26. | காங்கேசன்துறை | 53 | கரைச்சி |
| 27. | சுன்னாகம் | 54. | முகமாலை |

(A-1438)

---

தமிழகத்தில்—

# ஈழத்து கலைஞர்பங்கு பற்றும் இசைவிழா நடத்த ஏற்பாடு

மாவிட்டபுரம், ஞாயிறு ''ஈழத்து இசைக்கலைஞர்கள் பங்கு பற்றும் இசை விழா ஒன்றை தமிழகத்தில் நடத்துவதற்கு இசை அபிமானிகள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இதன் மூலம் எமது கலைஞர்களின் திறமை மேலும் வளர்ந்து பிரகாசிக்க வழி பிறக்கும்.''

இவ்வாறு இணுவில் வயலின் வித்துவான் திரு. இ இராதா கிருஷ்ணனின் வயலின் இசை ஒலிப்பதிவு நாடாக்களின் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு ஜெகா செந்தில்நாதன் கூறினர்

இணுவில் விவேகானந்தா கி. அ சங்க ஆதரவில் மஞ்சத்தடி கந்தசுவாமி கோவில் அரங்கில் இடம்பெற்ற இவ் விழாவில் வயலின் வித்துவான் திரு இராதா கிருஷ்ணன் பிரமுகர்கள் கலைஞர்களால் மாலை அணியப்பட்டு பொன்னுடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இயலிசை வாரிதி என் வீரமணி ஐயர் வாழ்த்துப்பா ஒன்றை வாசித்தளித்தார்.

இவ் விழாவில் கிளிநொச்சி அரச அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''தமிழகத்தில் இடம்பெறும் இசை விழாக்களுக்கு இங்கிருந்து பல கலைஞர்கள் பங்குபற்றி எமக்கு பெருமை தேடித்தந்துள்ளார்கள் மேலும் எமது கலைஞர்களின் திறமையை வெளிக்காட்டும் வகையில் ஈழத்துக் கலைஞர்கள் மட்டும் பங்கு பற்றும் இசை விழா ஒன்றை தமிழகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன் மூலம் எமது கலைஞர்களின் திறமையை வளர்க்கவும், எமக்கு புகழ் ஈட்டித் தரவும் உதவும் இம் முயற்சிக்கு எமது கலைஞர்களும் உதவவேண்டும்.''

இணுவில் கலைக்கு பேர்போன கிராமமாகும் பல சிறந்த கலைஞர்களை இக் கிராமம் எமக்கு அளித்துள்ளது திறமை பெற்ற கலைஞர்களால் அவர்களின் கிராமத்திற்கே பெருமையாகும் இவ்வகையில் வயலின் வித்துவான் இராதா கிருஷ்ணனால் இணுவில் கிராமம் மேலும் பெருமை பெறுகிறது ''

கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் பேசுகையில்:- எமது மக்கள மத்தியில மனித உணர்வுகள் குறைந்து வருகின்றன. இன்னல்களை கேட்டும் பார்த்தும் மனம் நிலை குலைந்து உணர்வற்ற நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந் நிலையை போக்கி மக்கள் மனதில் புத்துணர்வை ஊட்ட கலைகள் மிகவும் அவசியமானவை இசைக்கச்சேரிகளை ஒவ்வோர் இல்லங்களிலும் ஒலிக்கச் செய்வதால் மக்கள் மனதில் புதிய தெம்பை ஏற்படுத்த முடியும். அதற்கு இவ்வாறான கசெட் ஒலிப்பதிவுகள் இன்றியமையாதவை'' என்றார்.

மற்றும் பல்வேறு பிரமுகர்கள் வயலின் வித்துவான் இராதா கிருஷ்ணனின் திறமையை பாராட்டிப் பேசினர். (வா)

# இன்றைய பலன்

மாதம்; புரட்டாதி
திகதி: 20 (6-10-86)
திங்கட்கிழமை
நக்ஷத்திரம்: சுவாதி
மூ. ப வரை
திதி: திருதியை மு.இ வரை

மேடம்: காதலர் வாழ்விலும் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். குடும்பப் பிணியும் தீரும். சிலர் வாழ்க்கையில் வாகன நலனுமுண்டாம்.

இடபம்; அன்னியர் விடயத்தில் அதிககவனம் செலுத்தவும் பூமி விடயத்தில் வீண் பிரச்னைகளும் உருவாகலாம் எதையும் சமயோசித புத்தியுடன் செயல்படுத்தவும்.

மிதுனம்: பிதாவழிப் பெருமையுண்டு பொதுசன மதிப்பும் உயரும் கல்வி கற்போர் முன்னேற்றமடைவர்.

கடகம்: வாகன லாபம் உண்டு. வரவிலும் திருப்தியுண்டு குடும்பததில் நன்மாற்றங்களும் ஏற்படும் சுபதினம்.

சிங்கம்: சகோதரவழி சந்தோஷமுண்டு. தன தானிய விருத்தியுமுண்டு. தொழில் முன்னேற்றமும் மேலிடத்து ஆதரவும் கிட்டும்.

கன்னி; பொருள் விரயத்திற்கிடமுண்டு சிந்தனை சிதறிவலை பின்னும். செய்தொழிலிலும் சிரமம் தோன்றலாம். அவதானம் வேண்டும்.

துலாம்: துரிதகெதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடலாம். எதிலும் அவசரக்கோலம் தென்படும் தற்பெருமையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: போதுமென்ற மனத்துடன்செயல்படுவீர்கள். இதமான வாழ்வும் கிடைக்கும் மனதிற்கேற்ற வண்ணம் மனமாற்றங்களும் இடம் பெறும்.

தனுசு: குறைகேட்க நேரிடும். கடமையில் தடைகள் உருவாகும் பகைவர்கள் காத்திருப்பர். சிந்தனைக்கிடமளியாதிருக்கவும்.

மகரம்: தன்மான மிகுதிக்கும் தனவரவிற்குமிடமுண்டாம். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்னைவழியால் நற்செய்தியும் கிட்டும்.

கும்பம்: புத்திர சுகமுண்டு. உறவினர் படையெடுத்து வருவர். பணவரவும் உண்டு. குடும்பத்திலும் குதூகலம் தென்படும்.

மீனம்: ஆமைவேகத்தில் காரியங்கள் இடம்பெறும் பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாகிவிடும். சிலருக்கு மன நோயும் தென்படலாம்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

## நவராத்திரி விழா

கொழும்புத்துறை ஞாயிறு கொழும்புததுறை வசாகப் பெருமாள் முருகனாலயத்தில் நவராத்திரி பூஜை ஆரம்பமாகியுள்ளது பத்தாம்நாள் ஆயுதபூஜையும் சிறைப்பாக நடைபெறவுள்ளது தினமும் கூட்டுப் பஜனைகளும் இடம் பெற்று வருகின்றன.

★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர் விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி உற்சவம் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக் குருக்கள தலைமையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. விசேட அபிஷேகம், பூஜை ஆராதனைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

## கருத்தரங்கு

புங்குடுதீவு நிருபர் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடத்தப்படும் உலக சுற்றாடல் தின ருத்தரங்கு வேலணை ப. நோ. கூ. ச. மண்டபத்தில் இன்று காலை வேலணை உதவி அரசாங்க அபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது (வா)

## பிரெஞ்சு மொழியில் டிப்ளோமா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு ஜோசேப் றமண்ட் என்பவருக்கு பிரான்சிலுள்ள பாரீஸ் பல்கலைக் கழகம் பிரெஞ்சு மொழியில் டிப்ளோமாப் பட்டம் வழங்கியுள்ளது.

பிரான்சிலிருந்து வெளிவரும் செமெதி என்ற செய்தியேடு இவருடைய படத்துடன் சாதனையையும் வெளியிட்டுள்ளது. இவர் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் பழையமாணவராவார்.

(நெல்-நி-ஈ)


## எமது புதிய வெளியீடுகள்

1. நரேஷ்குமார், மாதுரி, செந்தில்
   என்றுவது ஒருநாள் (Pyramid Original)
2. S V. சேகர், சுலக்ஷனா, செந்தில்
   ஜிகு ஜிகு ரயில் (Pyramid Original)
3. முரளி, ஜெயஸ்ரீ கவுண்டமணி
   காலமெல்லாம் உன்மடியில் (V. G. P. Master)
4. சத்தியராஜ், ஜீவிதா
   இரவுப் பூக்கள் (V G. P. Master)
5. மோகன், ரஞ்சனி, விசு
   மெல்லத்திறந்தது கதவு (Pyramid Master)
6. மோகன் அமலா, செந்தில்
   உன்னை ஒன்று கேட்பேன் (V G P. Master)
7. அர்ஜுன், அனிதா, செந்தில்
   என் சபதம் (V G. P. Master)

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 [A-1389]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 6-10-86

# "இந்திய நிலை மேலும் உறுதியானால்— தமிழர் கோரிக்கையை ஏற்க இலங்கை அரசு தயங்காது"

## —முன்னாள் நீதியரசர் கிருஷ்ணஐயர்

சென்னை, அக் 5 "இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாடு மேலும் உறுதியாக காணப்படும் பட்சத்தில் ஈழத்தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதில் இலங்கை அரசு எந்தவிதமான தயக்கத்தையும் காட்டாது."

இவ்வாறு முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணஐயர் தெரிவித்துள்ளார். திருச்சியில் அவர் செய்தியாளரிடையே பேசுகையில் இலங்கைப் பிரச்னை சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

இலங்கை அரசின் சட்டங்கள் அந்நாட்டு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவுடன் தான் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்ட நீதியரசர் கிருஷ்ணஐயர் அப்போது தான் சிறுபான்மைத் தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என நம்பிக்கை தெரிவித்தார். (வா-ஊ)

## பிராங்பேர்ட் புத்தகக்கண்காட்சி

பொன். அக் 5 பிராங்பேர்ட்டில் 140 நாடுகள் புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடாத்திவருகின்றன, இந்தப் புத்தகக்கண்காட்சியில் இந்தியாவின் கலை, கலாசாரம். மொழியியல்சம்பந்தமான நூல்களுக்கு பார்வையாளர் மத்தியில் அதிக வரவேற்புக்கிட்டியுள்ளது.

பெரும்பாலான நாடுகள் இந்தியா பற்றிய நூல்களையும் இக்கண்காட்சியில் வெளியிட்டிருக்கின்றன இக்கண்காட்சி இந்தியா பற்றிய தப்பபிப்பிராயத்தை நீக்கும் என்றும் ஒருபார்வையாளர் குறிப்பிட்டார். (ஊ)

## ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன ஊழியர் திடீர் வேலை நீக்கம்!

ஒட்டுசுட்டான், ஞாயிறு வடமாகாணத்திலுள்ள நீர்ப்பாசன அலுவலகங்களில் பல வருடங்களாகக் கடமையாற்றி வந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் சேவை தேவையில்லையென்று பதவி நீக்கக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் தற்காலிக ஊழியர்களாகப் பத்து வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வந்துள்ளார்கள்.

நீர்ப்பாசன இலாகவில் நிதி பற்றுக்குறை காரணத்தினாலேயே இவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவதாக அறியப்படுகிறது

இதனால் இதை நம்பி வாழ்ந்த பல குடும்பத்தினர் கதியின்றிப் பாதிப்படைந்துள்ளனர். (ஒள)

## மலையகத்தில் தனிச்சிங்களம்

(நமது நிருபர்)

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் பல இடங்களிலும் தனிச் சிங்களத்தில் அறிவித்தல் பலகைகள் நிறுவப்பட்டுவருகிறது. இதனை தமிழ் மக்கள் வன்மையாக எதிர்த்து வருகின்றார்கள்.

தமிழ் மக்கள் மிகவும் செறிவாக வாழ்ந்து வரும் இத்தேர்தல் தொகுதியில் தமிழும் இடம்பெறாதா என்று தமிழ் மக்கள் ஏங்குகின்றார்கள்.

## மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், திங்கள் 'வீரவேங்கை' து. ஜெயரூபன் (லெப்டினண்ட் சாம்) நினைவு தினத்தையொட்டி இன்று மாலைமௌனஊர்வலம் நடைபெறவுள்ளது.

மயிலங்காடு ஸ்ரீ முருகன் பாடசாலையிலிருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் ஏழாலைமகாவித்தியாலயத்தை சென்றடையும். அங்கு நினைவுரை கவிதாஞ்சலி, ஈழவிலிசை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

இன்றுமாலை 'ஹீரோராஜ்' நினைவாக மலலாகத்தில் அமைக்கப்பட்ட புதிய வீதியொன்றும் திறந்துவைக்கப் படவுள்ளது. (மா)

## இந்திய---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை பிரதமர் ராஜீவிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதனிடையே, இணை அமைச்சர் சிதம்பரமும், பாலகிருஸ்ணனும் தமிழ்ப்போராளிகளை உத்தியோகப் பற்றற்றரீதியில் சந்தித்துப் போசியதாகவும் தெரியவருகிறது. [ஊ]

## கிரிக்கெட்

## 5வது ஒருநாள் போட்டியில் இந்தியா ஆஸி.யைவென்றது

புதுடில்லி, ஓக் 5 இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே அகமதாபாத்தில இன்று நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் போட்டியில இந்தியா 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

டாஸில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் இந்தியாவை தடுப்பெடுத்தாடப் பணித்தார் இந்தியா 47.4 ஓவரில் 193 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது ரவி சாஸ்திரி 53 ஓட்டங்களையும் மதன்லால் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி43 4ஓவரில்141 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. போர்டர் 43 ஓட்டங்களைப் பெற்றார். ரவிசாஸ்திரியும், கபில்தேவும் தலா இரு விக்கெட்டுகளைப் பெற்றனர்.

இவ்வெற்றியையடுத்துஇந்த ஆறு போட்டித் தொடரில் இந்தியா 3-1 என்ற ரீதியில் வெற்றி பெற்றுள்ளது.

### அடுத்த ஆட்டம்

இருஅணிகளுக்கிடையிலான ஆறாவதும் இறுதியானதுமான ஒருநாள் போட்டி செவ்வாய்க்கிழமை 7-ம் திகதி நடைபெறவுள்ளது. (ஊ)

## இராணுவத்தின் துப்பாக்கி சூட்டுக்கு இளைஞர் காயம்

பருத்தித்துறை, ஞாயிறு பருத்தித்துறையில் இளைஞரொருவர் நேற்று இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி படுகாயங்களுக்குள்ளானார்.

சுப்பர் மடத்தைச் சேர்ந்த எஸ். செபஸ்தியாம்பிள்ளை (வயது 24) என்பவர் மேலைப்புபோலி சதாவதானி கதிரவேற்பிள்ளைவீதி யருகாமையில் வைத்தே இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி காயங்களுக்குள்ளானார் அவர் உடனடியாகப் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் பின்னர் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

நேற்றுப் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன. மோட்டார் ஷெல் தாக்குதல்களால் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது இதனால் சில வீடுகள் சேதமடைந்துள்ளன. (க)

## எல்லை நிர்ணய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தனது செயற்பாட்டைச் செய்துமுடிக்கக்கூடியதாக இருக்குமெனவும் அவ்வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன

இதேவேளை அண்மையில் இந்திய அரசும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இலங்கைஅரசுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

அரசாங்கத்தின் இந்தப் பிந்திய யோசனைகளுக்குத் தமிழ்ப் போராளிகள் உடன்பட்டு வருவதற்குமான முயற்சிகளும் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறின. [கே]

## லொறிச்சேவை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரத்தும் நடைபெறாது போராட்டம் நடத்திவருகின்றன.

"இவர்களுடைய இப்போராட்டம் நியாயமானது ஆகையால் இச்சம்பவங்கள் மேலும் தொடராமலிருக்க ஏனைய இயக்கங்களின் ஒத்துழைப்பையும் நாம் கோருவதோடு இனிமேலும் இச்சம்பவங்கள் இடம்பெறாமல் முடிந்தவரை தடுத்தும், இல்லையேல் அவர்களை மக்களுக்கு இனங்காட்டுவோமென்று உறுதியளித்து வடபகுதி மக்களின் நலன்கருதி இப்போராட்டத்தைக் கைவிடும்படி மேற்கூறிய சங்கங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்". [மா]

## குண்டுவைத்து---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாத நபர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினரின் பாவனைக்கு இவ்வியந்திரம் உபயோகிக்கப்படுவதால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே மட்டக்களப்பு மாநகரசபை வளவுக்குள் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இரு சக்கர உழவுயந்திரங்களுள் மூன்று இயந்திரங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு செயலகத்திலுள்ள களஞ்சியஅறை உடைக்கப்பட்டுப் பல பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவங்கள் நடைபெற்றன. [மா]

## சிங்கள---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிதழ்கள், பிரசுரங்கள் தனிச் சிங்கள மொழியிலேயே அச்சிடப்பட்டிருந்தன. தேசிய கீதம் தமிழ்மாணவிகளால் சிங்களத்தில், பாடுவதற்கு பயிற்றப்பட்டுவருவதாகவும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இப்பாடசாலை சம்பந்தப்பட்ட குறைகள் பற்றி தொழிற்சங்கங்கள் பலமகஜர்களை கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பியும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வித்தியாலயத்தின் அவலநிலைக்கு உடன் நிவாரணம் காண வேண்டுமென்று பெற்றோர்களும் இப்பகுதிப் பொதுமக்களும் அமைச்சர் எஸ். தொண்டமானிடம் நீண்ட மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். (நு-நி)

## தமிழ்கைதிகள்---

(1ம் பக்க தொடர்ச்சி)

கூட்டமைப்பு நேற்றுக்கூடி இந்தமுடிவை எடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

கொழும்பு பிரஜைகள் குழுவின் பொறுப்பில் சிறைச்சாலை உண்ணாவிரதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்ற உறுதிமொழி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை சிறைக்கைதிகள் கைவிட்டுள்ளனர்.

சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுத்த 6 அம்சக்கோரிக்கைகள் அரசாங்கத்தால் தொடர்ந்தும் நிறைவேற்றப்படாது காலம்தாழ்த்தினால்' மாணவ அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்கனவே தீர்மானித்தபடி சிறை வைக்கப்பட்டிருப்போருக்கு ஆதரவாகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [மா]


## மரண அறிவித்தல்

### திருமதி யோசப்பின் றெபேட் சவிரிமுத்து

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி யோசப்பின் றெபேட் சவிரிமுத்து காலமானார் இவர்காலம்சென்ற றெபேட் சவிரிமுத்துவின் அன்பு மனைவியும், காலம் சென்ற ஜெயபாலன், ஜிற்ரேந்திரன், றேகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரன் வீரசிங்கம் (நைஜீரியா), ஜீவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜொய்சன, மறினி, செறின், ஜெம்சன்ஆகியோரின் பாட்டியுமாவார் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 7 10 86 செவ்வாய்க்கிழமை நாளை காலை 8.30 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

அர்ச் அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்: ஜிற்ரேந்திரன் சவிரிமுத்து.

[C-5031]

### அருணாசலம் கந்தசாமி

உடுவில் பகுதி பிறப்பு, இறப்பு பதிவாளரும் வலிகாமம் வடக்கு விவாகப் பதிவாளரும், சங்குவேலி வித்தியாசாலை முன்னாள் அதிபருமான திரு. அருணாசலம் கந்தசாமி சிவபதமடைந்தார் இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் திருமதி கௌரி சிவராஜசுந்தரம் (ஆசிரியை, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) திரு. க சிவ ஜி (ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. க. சிவராஜசுந்தரத்தின் (ஆசிரியர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்) மாமனாரும் திருமதி இ. பாக்கியம், திரு சி. பரமசாமி (நைஜீரியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம் சென்ற மு. பசுபதியின் (இளைப்பாறிய கணக்காளர்) சகலனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 7 - 10 - 86 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க. சிவாஜி, உடுவில் மேற்கு, சுன்னாகம்.

[C-5036]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126